**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்**: 534 **நாள்**: 01.10.2026

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் அளித்த பேட்டியில் தகவல்.**

இன்று (03.10.2026) மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள், வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம் டைடல் பார்க் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வெள்ளத் தடுப்பு நடவடிக்கையாக, மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த மழைநீர் வடிகாலில் அடையாறு மண்டலம் ஐ.ஐ.டி. பகுதியிலிருந்து வெளிவரும் மழைநீரை பக்கிங்ஹாம் கால்வாயில் செலுத்தும் வகையில் டைடல் பார்க் பகுதியில் ரூ.13.52 கோடி மதிப்பீட்டில் 660 மீ. நீளத்தில் 3 மீ. x 3 மீ. அளவில் இரண்டு நீர்வழிப்பாதைகளாக கட்டப்பட்டு வரும் மழைநீர் வடிகாலினைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, மண்டல அலுவலர் திரு.என். தட்சிணாமூர்த்தி, செயற்பொறியாளர் திருமதி பி.பிரேமலதா மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**பின்னர், மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் செய்தியாளருக்கு அளித்த பேட்டி**:

**வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்**:

இன்றைய தினம் ஒரு மிக முக்கியமான பணியின் ஆய்வை நடத்தியுள்ளோம். குறிப்பாக, சென்னை இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தின் (ஐ.ஐ.டி சென்னை) கிட்டத்தட்ட 610 ஏக்கர் பரப்பளவு கொண்ட ஒரு பெரிய வளாகம், அதை ஒட்டி அமைந்துள்ள கிண்டி தேசியப் பூங்கா, மாண்புமிகு ஆளுநர் மாளிகை, லோக் பவன் போன்ற பகுதிகள் அமைந்துள்ளன.

லோக் பவனின் 102 ஹெக்டேர், ஐ.ஐ.டி-யின் 250 ஹெக்டேர் மற்றும் இந்தக் கானகத்தின் 125 ஹெக்டேர் பரப்பளவில் உள்ள மழைநீரை எப்படித் தெற்கு பக்கிங்காம் கால்வாய்க்குச் சிரமமில்லாமல் கொண்டு செல்லலாம் என்ற ஆலோசனையின்படி, கடந்த காலங்களில் கிடைத்த அனுபவத்தின் அடிப்படையில், தொழில்நுட்பக் குழுவின் பரிந்துரையின் பேரில் இந்தப் பணியைப் பெருநகர சென்னை மாநகராட்சி ஏற்றுச் செய்கிறது.

ஐ.ஐ.டி-யில் 350 மீட்டர் நீளமான சீரமைக்கப்பட்ட கால்வாய் ஒன்று உள்ளது. அந்தக் கால்வாயின் பூஜ்ஜியப் புள்ளியிலிருந்து 660 மீட்டர் தொலைவில் உள்ள தெற்கு பக்கிங்காம் கால்வாய் வரை, டைடல் பார்க் திறந்தவெளி ஒதுக்கீட்டுப் பகுதி வழியாக இந்த நீரை 3x3 மீட்டர்

அளவுள்ள பெரிய இரட்டை கால்வாய் கொண்ட 'வெட்டி மூடும்' (Cut and Cover) முறையிலான மழைநீர் வடிகாலை உருவாக்கி, தெற்கு பக்கிங்காம் கால்வாயில் வெளியேற்றும் திட்டம் இது.

இந்தத் திட்டம் இரண்டு சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டுப் பணிகள் வழங்கப்பட்டுள்ளன. அதில் சிப்பம் ஒன்றில் 330 மீட்டர் நீளமான 'வெட்டி மூடும்' (Cut and Cover) முறையிலான மழைநீர் வடிகால் அமைக்கப்படுகிறது. அந்தச் சிப்பத்தைப் பொறுத்தவரை 40 மீட்டர் பணிகள் இன்னும் முடிவடைய வேண்டியுள்ளன. அந்த 40 மீட்டர் பணிகள் இங்கிருந்து 200 மீட்டர் தொலைவில் நடைபெற்று வருகின்றன. இன்னும் 10 நாட்களுக்குள் அந்த 40 மீட்டர் பணிகள் முழுமையாக முடிவடையும். மழைநீர் வடிகாலின் மேல் பகுதியினை தளம்போட்டு மூடும் பணிகள் தான் இப்போது நடைபெறுகின்றன. மண் தோண்டும் பணி முடிந்து வடிகால் இணைக்கப்பட்டுவிட்டது. ஆனால் அதன் மேல் கான்கிரீட் மூலம் தளம்போட்டு மூடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சிப்பம் இரண்டைப் பொறுத்தவரை, அது மிகச் சிக்கலான ஒரு திட்டம். ஏனெனில், நாம் ராஜீவ் காந்தி (ஓ.எம்.ஆர்) சாலையைக் குறுக்கிட வேண்டும். அங்குச் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் நிலத்தடி நிலையத்தின் சுரங்கக் குடைவு இயந்திரத்தின் நுழைவுப் புள்ளி உள்ளது. எனவே, அந்த இயந்திர நுழைவுப் புள்ளி மற்றும் மெட்ரோ ரயில் நிலையம் அமைந்துள்ள பகுதியில் மழைநீர் வடிகாலை இணைத்துத் தெற்கு பக்கிங்காம் கால்வாயில் கொண்டு போய் சேர்க்க வேண்டும். அந்த 90 மீட்டர் பணிகள்தான் இப்போது நடைபெற்று வருகின்றன. அதை இரண்டாகப் பிரித்து, முதல் 45 மீட்டர் பணிகள் மெட்ரோ ரயில் பகுதியில் நடைபெறுகின்றன. அது இன்னும் 10 முதல் 15 நாட்களுக்குள் முடிவடையும்.

ஓ.எம்.ஆர் சாலையைப் பொறுத்தவரை, முழுச் சாலையையும் குறுக்கிட்டு இரவில்தான் வேலை செய்ய வேண்டிய கட்டாயம் உள்ளது. எனவே, காவல்துறை அனுமதி பெற்று அதற்கு ஏற்றவாறு பணிகளை முன்னெடுப்போம். ஆக மொத்தம், மீதமுள்ள இந்த 90 மீட்டர் பணிகளை வரும் 20 நாட்களுக்குள் முடிப்பதற்குத் திட்டம் போட்டுள்ளோம்.

தற்போதுள்ள ஒரு வடிகாலும் இருக்கிறது: அது ஒரு மாற்றுத் திட்டமாகத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. அந்தத் தற்போதுள்ள வடிகாலையும், நெடுஞ்சாலைத் துறையின் வடிகாலையும் தொடர்ச்சியாக அதற்காகத் தயார் நிலையில் வைத்துள்ளோம்.

இதுமட்டுமல்லாமல், சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை பல்வேறு திட்டப் பணிகள் 99% முடிவடைந்து, குறுகிய கால மற்றும் நடுத்தரக் கால நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. நீண்டகால நடவடிக்கைகளான கோவளம் வடிநிலப் பகுதியில் உள்ள பணிகள் (KFW திட்டம் போன்ற நீண்டகால திட்டங்கள் முடிய இன்னும் இரண்டு ஆண்டுகள் ஆகும்) போன்றவற்றில், முன்னுரிமைப் பணிகளை மட்டும் இந்த அக்டோபர் மாதத்திற்குள் முடிக்க வேண்டும் என்று திட்டம் போட்டுள்ளோம். அந்தத் திட்ட ஏற்பாட்டின்படி, இப்பணிகள் அனைத்தும் முடியும் தருவாயில் உள்ளன.

அதுமட்டுமல்லாமல், ஏற்கனவே கட்டப்பட்ட எங்களது மழைநீர் வடிகால்களில் பல்வேறு காரணங்களால் - அதாவது கழிவுநீரைச் சட்டவிரோதமாக இணைப்பதனாலும், வழக்கமாகத் தென்மேற்குப் பருவமழையின் போது மழைநீருடன் சேர்ந்து வண்டல் மற்றும் மண் உள்ளே வருவதனாலும் அடைப்புகள் ஏற்படுகின்றன. அதைத் தூய்மைப்படுத்துவதற்காக முன்னுரிமை அடிப்படையில் 1600 கிலோமீட்டர் நீளமுள்ள மழைநீர் வடிகால்களைத் தூய்மைப்படுத்தும் திட்டம் தொடங்கப்பட்டு, அதில் 1400 கிலோமீட்டர் தூய்மைப்பணி முடிவடைந்துள்ளது. மீதமுள்ள 200 கிலோமீட்டர் பணிகள் பல்வேறு ஒப்பந்தங்களாகப் பிரித்து வழங்கப்பட்டுள்ளன. அதுவும் இன்னும் ஒரு வாரத்திற்குள் முழுமையாக முடிவடையும்.

மற்றொரு பகுதியாக வண்டல் சேகரிப்புத் தொட்டிகள் உள்ளன. ஒவ்வொரு வடிகாலுக்கும் முன்பாகக் கம்பித் தடுப்பு அமைக்கப்பட்டிருப்பதைப் பார்த்திருப்பீர்கள். அந்தக் கம்பித் தடுப்பு வழியாகத்தான் நீர் உள்ளே வடியும். வண்டல் உள்ளே செல்லாமல் தடுப்பதற்கான நடவடிக்கை இது. அந்த வண்டல் சேகரிப்புத் தொட்டிகளைத் தூய்மைப்படுத்தும் பணியில், கண்டறியப்பட்ட 1,10,000 தொட்டிகளிலும் முதற்கட்டத் தூய்மைப்பணி முடிவடைந்து, இரண்டாம் கட்டத் தூய்மைப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் நீர்வளத் துறை, நெடுஞ்சாலைத் துறை, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மற்றும் இரயில்வே போன்ற இந்திய அரசுத் துறைகளுடனும் ஒருங்கிணைந்து பல்வேறு முன்னெச்சரிக்கைப் பணிகளைச் செய்து வருகிறோம். குறிப்பாக, சென்னை துறைமுகம் முதல் மதுரவாயல் வரையிலான உயர்மட்ட விரைவுச் சாலைப் பணிகளைத் தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் செய்து வருகிறது. அவர்கள் முழு வீச்சில் செய்து வந்த அந்தப் பணிகளைத் தற்காலிகமாக நிறுத்தக் கூறியுள்ளோம். அந்தப் பணிகளுக்காக அவர்கள் அமைத்த பெரிய கற்கள் போன்றவற்றை அகற்றச் சொல்லியிருக்கிறோம். கூவம் ஆற்றின் பகுதியில் அடைப்பு ஏற்படுத்தும் வகையில் அவர்கள் அமைத்த தற்காலிக அணுகுசாலைகள் மற்றும் கரைகளில் 70% அகற்றிவிட்டனர். அக்டோபர் 15-க்குள் 100% கற்களையும், அகற்றத் தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

தெற்கு சென்னையைப் பொறுத்தவரை, மற்றொரு முக்கியமான பணி - அரசன் கழனி கால்வாயிலிருந்து வரும் அதிகப்படியான நீரை, ஒக்கியம்மடுவின் அழுத்தத்தைக் குறைப்பதற்காக, நூக்கம்பாளையம் பாலம், ஓ.எம்.ஆர் மற்றும் தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய (டி.என்.எச்.பி) சாலை வழியாகத் தெற்கு பக்கிங்காம் கால்வாய்க்குக் கொண்டு செல்லும் திட்டமாகும். இது 19 சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டு நடைபெறுகிறது. இதில் நூக்கம்பாளையம் பகுதியில் பணிகள் முடிந்துவிட்டன. டி.என்.எச்.பி பகுதியிலும் பெரும்பாலான பணிகள் முடிந்துவிட்டன. ஓ.எம்.ஆர் பகுதியில் இரவில்தான் பணி செய்ய முடியும் என்பதால் அங்கு இன்னும் 20 நாட்கள் ஆகும்.

அந்தப் பணிகள் முழுமையாக முடியாவிட்டாலும் கூட, அங்குச் சில மெட்ரோ ரயில் நிலையங்கள் வருவதால், அந்த நிலையங்கள் இருக்கும் இடங்களில் இப்போது முழுமையான வடிகால் கட்ட முடியாது. மெட்ரோ பணிகள் முடிந்த பிறகே வடிகால் கட்டப்படும். அதுவரை அங்கு நீர் இறைக்கும் பம்புகள் மற்றும் நீர்ச்சேமிப்புத் தொட்டி ஏற்பாடுகள் மெட்ரோ ரயில் நிறுவனத்துடன் இணைந்து செய்யப்பட்டுள்ளன.

சுருக்கமாகச் சொன்னால், வட சென்னை, மத்திய நகரம் மற்றும் தென் சென்னையில் உள்ள பல்வேறு திட்டப் பணிகளை முன்னுரிமைப்படுத்தி, அந்த முன்னுரிமைப் பணிகளை நிறைவு செய்துள்ளோம். உள்ள வடிகால்களைத் தூர்வாரிச் சரியாகப் பராமரிக்க வேண்டும் என்பதால், 15 மண்டலங்களுக்கும் 15 கண்காணிப்பு அதிகாரிகளாக ஐ.ஏ.எஸ் அதிகாரிகளை நியமித்துள்ளோம்.

அதேபோல மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 7 பொறுப்பு அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒரு அமைச்சருக்கு 2 முதல் 3 மண்டலங்கள் பிரிக்கப்பட்டு, அமைச்சர்களும் கண்காணிப்பு அதிகாரிகளும் அந்தந்தப் பகுதிகளில் உள்ள பாதிப்புத் தன்மையை மதிப்பீடு செய்கின்றனர். தாழ்வான பகுதிகள் மற்றும் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளைக் கண்டறிந்து, அங்குச் சீரமைப்புப் பணிகள் முழுமையாக முடிவடைந்துள்ளனவா என்பதைப் புகைப்படச் சான்றுடன் அறிக்கை அளிக்கின்றனர்.

வரும் திங்கள்கிழமை கூடுதல் தலைமைச் செயலாளர் தலைமையில் அனைத்து மண்டல ஐ.ஏ.எஸ் கண்காணிப்பு அதிகாரிகளுடன் மறுஆய்வுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதில் மண்டலம் 1 முதல் 15 வரை உள்ள குறிப்பிட்ட பிரச்சினைகள் மற்றும் துறைகளுக்கு இடையேயான பிரச்சினைகள் சுட்டிக்காட்டப்பட்டு, பணிகள் முடிவடைந்துள்ளனவா என்பது குறித்து விரிவாக மறுஆய்வு செய்யப்படும்.

முந்தைய ஆலோசனையின் போது கண்காணிப்பு அதிகாரிகளின் கருத்துப்படி, பெரும்பாலான இடங்களில் பணிகள் முடிந்துவிட்டன; ஒரு சில இடங்களில், குறிப்பாகச் சிறுபாலங்களைத் தூர்வார வேண்டும். உதாரணமாக, நெடுஞ்சாலைத் துறையின் ஆரச் (ரேடியல்) சாலையில் உள்ள 17 சிறுபாலங்கள் மற்றும் இரயில்வேயின் 20-க்கும் மேற்பட்ட சிறுபாலங்களை முழுமையாகத் தூர்வார வேண்டும். பெருநகர சென்னை மாநகராட்சியின் சில தாழ்வான பாலங்களான விருகம்பாக்கம் கால்வாயில் உள்ள 9 பாலங்கள் மற்றும் மாம்பலம் கால்வாய் பாலங்களை உயர்த்திக் கட்டுவதுதான் நிரந்தரத் தீர்வு. உடனடியாக அதைச் செய்ய முடியாது என்றாலும், தற்போது அந்தச் சிறுபாலங்களை அதிகபட்சமாகத் தூர்வாரி நீர் ஓட்டம் சீராக இருக்கும்படி செய்யப் பரிந்துரைத்துள்ளனர்.

அதன் அடிப்படையில் அங்கு அதிகமான இயந்திரங்களைப் பொருத்தியுள்ளோம். நீர்நிலைகளில் இயங்கும் இயந்திரம், தானியங்கி தோண்டு இயந்திரம், ஜே.சி.பி, மிதக்கும் ஜே.சி.பி போன்ற இயந்திரங்களைப் பயன்படுத்திச் சிறுபாலங்களைத் தூர்வாரும் பணிகளை வரும்

அக்டோபர் 10 முதல் 15-ஆம் தேதிக்குள் முழுமையாக முடிக்கத் திட்டம் போட்டுள்ளோம். வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அடுத்து, கடந்த இரண்டு மாதங்களாக மாநகரப் பகுதியில் சவாலாக இருந்தது பரவும் காய்ச்சல் ஆகும். காய்ச்சல் சற்று அதிகமாக இருந்தாலும், டெங்கு பரவல் அந்த அளவுக்கு உயரவில்லை. ஆனால் கடந்த ஆண்டோடு ஒப்பிடும்போது 'ஐ.ஜி.எம்' டெங்கு நேர்மறை பாதிப்புகள் அதிகமாக இருந்தன. குறிப்பாகச் செப்டம்பர் மாதத்தில் 1,293 பாதிப்புகள் பதிவாகின. ஆனால் தற்போது அந்த எண்ணிக்கை குறைந்து வருகிறது. தினமும் 76, 80 எனக் காணப்பட்ட பாதிப்புகள் தற்போது 40, 50 எனக் குறைந்து வருவது நம்பிக்கையளிக்கிறது.

இருப்பினும் 50, 60 பாதிப்புகள் கூட வரக்கூடாது. வடகிழக்குப் பருவமழைக்கு முந்தைய காலத்தில் டெங்கு மட்டுமன்றிப் பல்வேறு காரணி வழி நோய்கள் பரவ வாய்ப்புள்ளதால், அதைத் தடுக்க மாநகராட்சிப் பகுதியில் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் முழு வீச்சில் நடைபெறுகின்றன. கடந்த ஒரு வாரமாகப் பெரிய கால்வாய்கள் மற்றும் ஆற்றுப் பகுதிகளில் ட்ரோன் மூலமாக கொசுப்புழு நாசினியைத் தெளித்து வருகிறோம்.

அறிவியல் பூர்வமாக டெங்குவை ஒழிக்க வீட்டைச் சுற்றியுள்ள சிறிய கொள்கலன்கள், கிண்ணங்கள், தட்டுகள், கைவிடப்பட்ட டயர்கள் போன்றவற்றை அகற்ற வேண்டும். அதற்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம். பொதுமக்கள் நல்ல ஒத்துழைப்பு தருகிறார்கள். அதனால் கொள்கலன்களில் லார்வா இருப்பது கணிசமாகக் குறைந்துள்ளது. நோயின் தாக்கமும் சுய எல்லைக்குள் சுருங்கி வருகிறது. இருந்தாலும் அந்த அழுத்தத் தொடர் நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறோம்.

இந்திய வானிலை ஆய்வகக் கணிப்பின்படி அக்டோபர் 15 முதல் 20-க்குள் வடகிழக்குப் பருவமழை தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டு 'எல் நினோ' ஆண்டாக இருப்பதால், மொத்த மழைப்பொழிவு குறைவாக இருந்தாலும், மேகவெடிப்பு போன்ற காரணங்களால் ஒரே நாளில் 20, 25, 30 சென்டிமீட்டர் என மிகக் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. சில நேரங்களில் காற்றழுத்தத் தாழ்வு மண்டலங்கள் புயலாக மாறவும் வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வகம் தெரிவித்துள்ளது.

நேற்றைய முன்தினம் தேசிய பெருங்கடல் தொழில்நுட்ப நிறுவனத்தில் (NIOT) நடைபெற்ற கூட்டத்தில் இது குறித்து விரிவாக விளக்கப்பட்டது. இதன் அடிப்படையில் நாங்களும் முன்னெச்சரிக்கையாக உள்ளோம். பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. 'நம்ம சென்னை' செயலியில் தன்னார்வலர்களுக்கான புதிய சேவை உருவாக்கப்பட்டு, அதில் 5,200 இளைஞர்கள் இணைந்துள்ளனர். மாநகராட்சி சார்பில் அவர்களுக்கு நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அவர்களின் விருப்பத்திற்கேற்ப மருத்துவச் சேவை, நிவாரண மையம், சமையலறைப் பணிகள் எனப் பிரித்து 5,200 தன்னார்வலர்களின் தரவுத்தளம் தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் 215 நிவாரண மையங்கள், 111 பொதுச் சமையலறைகள் தயார் நிலையில் உள்ளன. பால், மாவு, அரிசி, அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சுகாதாரத் துடைப்பாடைகள் அடங்கிய அவசரகாலக் கருவிப் பெட்டகங்கள் (எமர்ஜென்சி கிட்ஸ்) முன்கூட்டியே கொள்முதல் செய்யப்பட்டுத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

அரசும், மாநகராட்சியும் முழுத் தயார் நிலையில் இருந்தாலும், எல் நினோ மற்றும் தீவிர மழைக் கணிப்பு இருப்பதால் பொதுமக்களின் முழு ஒத்துழைப்பு தேவை. நாம் செய்யும் திட்டப் பணிகளுக்கு ஒரு எல்லை உள்ளது. பெரிய கால்வாய்கள் 600 கனஅடி நீரை வெளியேற்றும் திறன் கொண்டவை; ஆனால் சிறிய கால்வாய்கள் 6.4 சென்டிமீட்டர் மழை வரை மட்டுமே தாங்கும். மழை நின்ற பிறகே நீர் வடியும்.

அதேபோல் கடலில் உயர் அலை இருக்கும் போது பக்கிங்காம் கால்வாய், எண்ணூர், அடையாறு, கோவளம் முட்டுக்காடு முகத்துவாரங்கள் வழியாக நீர் உள்வாங்குவது தாமதமாகும். அலை குறைந்த பிறகே சிறிய வடிகால்களில் இருந்து நீர் வடியும். சென்னை ஒரு கடலோர நகரம் என்பதால் இத்தகைய சவால்கள் உள்ளன. அதே வேளையில் கடந்த கால அனுபவங்கள் நமக்கு அமைத்துத் தந்த பலமும் உள்ளது. பல முன்னெச்சரிக்கை மற்றும் சீரமைப்புப் பணிகளை முடித்துள்ளோம். இயற்கையோடு போட்டியிட முடியாது என்றாலும், பொதுமக்களின் ஒத்துழைப்புடன் இந்தப் பருவமழையை எதிர்கொள்ள அரசும் மாநகராட்சியும் முழு வீச்சில் இயங்கி வருகின்றன.

**செய்தியாளர்:**

பருவமழை மற்றும் டெங்குவுக்குப் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்துள்ளதாகக் கூறுகிறீர்கள். ஆனால் மாநகராட்சிக்கு உட்பட்ட சாலைகள் எங்குமே சரியாக இல்லை. இதனால் பல விபத்துகள் நடக்கின்றன. மழை வந்தால் நிலைமை இன்னும் மோசமாகிறது. இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**மாநகராட்சி ஆணையர்:**

பெருநகர சென்னை மாநகராட்சியில் 426 கிலோமீட்டர் பேருந்துச் சாலைகளும், 32,000-க்கும் மேற்பட்ட உட்புறச் சாலைகளும் உள்ளன. பெரும்பாலான இடங்களில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி, நிலத்தடி கழிவுநீர்க் குழாய் அமைக்கும் பணி, குடிநீர் விநியோகக் குழாய் அமைக்கும் பணி போன்றவை நடைபெற்று வருகின்றன. தெற்கு சென்னையில் பெரும்பாலான சாலைகளில் இப்பணிகள் நடப்பதால், பணிகள் முடிந்து நீர் அழுத்தச் சோதனை செய்த பிறகே குடிநீர் வாரியம் சாலைகளை எங்களிடம் ஒப்படைக்கும். அதேபோல் மெட்ரோ ரயில் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

பணிகள் முடியும் வரை தற்காலிகமாகச் சாலைகளைச் சீரமைக்க 29 கோடி ரூபாய் நிதியில் ஒட்டுவேலைகள் மற்றும் தற்காலிகச் சீரமைப்புப் பணிகளுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் இறுதி செய்யப்பட்டுள்ளன. பருவமழைக்கு முன் தற்காலிகச் சீரமைப்புப் பணிகள் உடனடியாகச் செய்யப்படும். முழுமையான சாலைச் சீரமைப்புப் பணிகள் பருவமழை முடிந்த பிறகு ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாதங்களில் மேற்கொள்ளப்படும்.

தற்போது தெற்கு சென்னையில் குடிநீர் வாரியம் ஒப்படைக்கும் சாலைகளை உடனடியாகப் போட 120 கோடி ரூபாய் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், சமூக வலைதளங்கள் மூலம் நாள்தோறும் வரும் 100-க்கும் மேற்பட்ட புகார்களைப் பரிசீலித்து, 72 மணி நேரத்திற்குள் குளிர்கலவை (கோல்ட் மிக்ஸ்) அல்லது ஒட்டுவேலை மூலம் சாலை பள்ளங்களை சீரமைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

**செய்தியாளர்** :

சாலை வெட்டுக்களுக்கான (Road Cut) கடைசித் தேதி என்ன?

**மாநகராட்சி ஆணையர்**:

நடப்பு மாத முதல் தேதியிலிருந்தே புதிய சாலை வெட்டுக்களுக்கு அனுமதி அளிப்பதில்லை. முடிவடையும் தருவாயில் உள்ள பணிகளை மட்டும் முடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. அவசரகாலப் பணிகளான மின்சார வாரியப் பணிகள், குடிநீர்க் கசிவுச் சீரமைப்பு, தகவல் தொழில்நுட்பப் பாதையில் உள்ள ஒளியிழை கேபிள் (OFC) பழுதுகள் போன்றவற்றுக்குச் சூழ்நிலைக்கேற்ப (Case by case) மட்டுமே அனுமதி வழங்கப்படும். மற்ற திட்டப் பணிகளுக்கான சாலை வெட்டு அனுமதிகள் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**